தால், கரும்பு விவசாயிகளிடமிருந்து வசூல் செய்வது அதிகாரமற்ற செயலாக இருக்கும். ஆகவே, என்ன செய்யவேண்டுமோ அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கே. பழனிசாமி: சார், திருநெல்வேலியிலிருந்து பக்கத்திலே ஒரு ஷுகர் பாக்டரிக்கு ரோடு இல்லை. செஸ் ஃபண்டை உபயோகித்து ரோடு போடுவது எப்படி என்று தெரியவில்லை. இது முக்கியமான ரோடு நேரடியாக, டவுனிலிருந்து ஷுகர் பாக்டரிக்கு என்ன காரணத்தால் ரோடு போடாமல் விடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: திருநெல்வேலியில் ஏதாவது செஸ் ஃபண்டிலிருந்து சாலைக்குச் செலவு செய்ததாக என்னிடத்தில் குறிப்பு இல்லை. ஏனென்றால், நெல்லை மாவட்டத்தில் சர்க்கரை ஆலையே இல்லை. ஆனால், மதுரை மாவட்டத்தில் என்ன நடக்கிறது, எவ்வளவு வசூல் ஆகிறது, என்ன செலவு செய்யப் பட்டது என்பதைப் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், விடை சேகரித்துத் தரப்படும்.

New Cattle feed.

* 711 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether a new protein rich cattle feed by using urea and molasses has been developed in the Agricultural University at Coimbatore ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கம்பம் பகுதியில் உருளைக்கிழங்கு சாகுபடி

* 712 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கம்பம் பகுதியில் உருளைக்கிழங்கு சாகுபடியைப் பரப்பும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?